கடிதம் வென்றவர்
உண்மை முடிவு பாரபட்சமின்மை — தேசிய நாளிதழ்
தலைவர் மற்றும் தலைமை ஆசிரியர்: அனில் குமார்
தெலுங்கானா,ஆந்திரா,கர்நாடகா,தமிழ்நாடு

| Saturday 30th August 2025 | தொகுதி – 06 | பிரச்சினை – 10 | விலை – 6.00/– | vijethatelugudaily@gmail.com | www.Vijethadaily.com |
|---|---|---|---|---|---|



# ஜப்பான் தொழில்நுட்ப உதவியுடன்..

கடிதம் வென்றவர்,டோக்கியோ:
அரசு முறை பயணமாக பிரதமர் மோடி ஜப்பான் சென்றிருக்கும் நிலையில், இந்தியா-ஜப்பான் இடையே முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. குறிப்பாக புல்லட் ரயில் திட்டத்தில் ஜப்பானுடன் இணைந்து செயல்படுவோம் என பிரதமர் மோடி தெரிவித்திருக்கிறார்.ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இந்தியா-ஜப்பான் வருடாந்திர உச்சி மாநாடு இன்றும் நாளையும் நடைபெறுகிறது. இது 15வது உச்சி மாநாடாகும். இதில் பங்கேற்க பிரதமர் நரேந்திர மோடி, 2 நாட்கள் அரசு முறை பயணமாக ஜப்பான் சென்றிருக்கிறார்.ஜப்பானில் அந்நாட்டு பிரதமர் ஷிகேரு இஷிபாவை, மோடி சந்தித்திருந்தார். இதனைடுத்து இருநாடுகளுக்கும் இடையே முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. குறிப்பாக புல்லட் ரயில் திட்டத்தில் ஜப்பானுடன் இணைந்து செயல்படுவோம் என பிரதமர் மோடி கூறியிருக்கிறார். ஜப்பானில் மேலும் அவர் பேசியதாவது,

"இன்றைய எங்கள் கலந்துரையாடல்கள் பயனுள்ளதாக இருந்தன. பெரிய பொருளாதார, ஜனநாயக நாடுகளாக எங்கள் கூட்டணி உலக அமைதிக்கும் பாதுகாப்புக்கும் அத்தியாவசியம். வலிமையான ஜனநாயக நாடுகள், சிறந்த உலகத்தை உருவாக்குவதில் இயல்பான கூட்டாளிகள். இந்த கூட்டணியில் புதிய அத்தியாயத்திற்கு இன்று அடிக்கல் நாட்டியிருக்கிறோம். முதலீடு, புதுமை, பொருளாதார பாதுகாப்பு, சுற்றுச்சூழல், தொழில்நுட்பம், சுகாதாரம், போக்குவரத்து பரிமாற்றங்கள் ஆகியவற்றை மையப்படுத்தி அடுத்த பத்தாண்டுகளுக்கான புதிய திட்டத்தை வகுத்திருக்கிறோம்.இந்த காலத்தில் ஜப்பான் இந்தியாவில் 10 டிரில்லியன் யென் முதலீடு செய்யும். பாதுகாப்புத் துறை மற்றும் புதுமைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்த முடிவெடுத்திருக்கிறோம். செமிகண்டக்டர்கள் மற்றும் அரிய வகை கனிமங்களை பங்கிட்டுக்கொள்ளுதல் உள்ளிட்ட விஷயங்களிலும் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம். இதில் எங்கள் ஒத்துழைப்பு மிகப்பெரிய அளவில் இருக்கும்" என்று கூறியிருக்கிறார்.

# எல்லோரும் கிளம்ப வேண்டியதுதான்..




கடிதம் வென்றவர், | நியூயார்க்:

எல்லோரும் கிளம்ப வேண்டியதுதான்... அமெரிக்க இந்தியர்களுக்கு ஆப்பு! H1B விதிகளை கடுமையாக்கும் அமெரிக்கா வேலைவாய்ப்பு சந்தையில் வெளிநாட்டவர்களுக்கு எதிராக கடுமையான கட்டுப்பாடுகளை மீண்டும் கொண்டு வர டொனால்ட் டிரம்ப் நிர்வாகம் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும், கிரீன் கார்டை போலவே 'கோல்ட் கார்ட்' முறையை தீவிரமாக்கவும் டொனால்ட் டிரம்ப் நிர்வாகம் முனைப்பு காட்டி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

# வைகை ஆற்றில் மிதந்த 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம் மனுக்கள்



கடிதம் வென்றவர், | மதுரை:

உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பொதுமக்களிடம் பெறப்பட்ட மனுக்கள் வைகை ஆற்றில் மிதந்து வந்ததாக தகவல் வெளியாகி உள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.தமிழ்நாட்டில் அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் முகாம்கள் நடத்தி மக்களிடம் மனுக்களை பெறும் வகையில் 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற புதிய திட்டத்தை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த ஜூலை 15 ஆம் தேதி தொடங்கி வைத்தார்.

## “பீகார் நிலைமை தமிழ்நாட்டுக்கு வரக்கூடாது”



கடிதம் வென்றவர்,சென்னை: பீகார் போன்ற நிலைமை தமிழ்நாட்டில் ஏற்பட்டு விடக்கூடாது. பீகார் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டி உள்ளது என தமிழக முதலமைச்சர் முக ஸ்டாலின் பேசியுள்ளார்.சென்னையில் நடைபெற்ற திமுக நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர். இளங்கோவின் மகள் திருமண விழாவை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையேற்று நடத்தி வைத்தார்.இந்த நிகழ்வில் "பீகாரில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சிறப்பு வாக்காளர் திருத்தம் பல பிரச்னைகளை ஏற்படுத்தியுள்ளது. அதற்கு எதிராகவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சகோதரர் ராகுல் காந்தி பேரணி மேற்கொண்டிருக்கிறார்.பீகாரில் நடந்ததை தமிழ்நாட்டில் நடக்க விடாமல் தடுத்து நிறுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருபவர்தான் வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ" என திமுக ராஜ்யசபா எம்.பி என்.ஆர்.இளங்கோ இல்லத் திருமண விழாவில் முதலமைச்சர் ஸ்டாலின் பேசியுள்ளார்.



## “கூட்டாட்சியை வலுப்படுத்துவே மாநில முதல்வர்கள்

கடிதம் வென்றவர்,சென்னை: கூட்டாட்சியை வலுப்படுத்துவோம் என்று பல்வேறு மாநில முதல்வர்களுக்கும், கட்சி தலைவர்களுக்கும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியிருக்கிறார். அக்கடிதத்தில், "இந்திய நாட்டின் கூட்டாட்சி அடித்தளங்களை வலுப்படுத்துவதிலும், அனைத்து மாநிலங்களின் ஒட்டுமொத்த விருப்பத்தைப் பிரதிபலிக்கும் வகையில் இதற்கான ஒரு ஆவணத்தை வடிவமைப்பதிலும் மாநில முதல்வர்களும், கட்சித் தலைவர்களும் தீவிரமாக பங்கேற்க வேண்டும்.

1935-ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்திலிருந்து குறிப்பிடத்தக்க வகையில் வடிவமைக்கப்பட்ட இந்திய அரசமைப்பானது, ஒன்றியத்திற்கும், மாநிலங்களுக்கும் இடையில் சிறந்ததொரு அதிகார சமநிலையுடன் கூடிய கூட்டாட்சி கட்டமைப்பினை உருவாக்கியது. இருப்பினும், பல ஆண்டுகளாக இந்த சமநிலை தொடர்ந்து மாற்றப்பட்டு வருகிறது. வலுவான ஒன்றியமும், வலுவான மாநிலங்களும் முரண்பட்டிருக்காமல், ஒன்றையொன்று சார்ந்து, ஒவ்வொன்றும் மற்றவற்றின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.1967-ஆம் ஆண்டில், அன்புக்குரிய தலைவரும், அப்போதைய தமிழ்நாட்டின் முதலமைச்சருமான டாக்டர் சி.என். அண்ணாதுரை, 'இந்தியாவின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் அளவுக்கு ஒன்றியம் வலுவாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்த நாட்டின் பாதுகாப்பிற்கு ஒன்றியத்தைப் பொறுப்பேற்கச் செய்யத் தேவையான அனைத்து

அதிகாரங்களும் ஒன்றியத்திடம் இருக்க வேண்டும். ஆனால், பாகிஸ்தானியர்களிடமிருந்தோ அல்லது சீனர்களிடமிருந்தோ இந்தியாவைப் பாதுகாக்க, ஒன்றிய அரசு இங்கு ஒரு சுகாதாரத் துறையை வைத்திருக்க வேண்டும் என்று அர்த்தமல்ல.அது எந்த வகையில் இந்தியாவின் இறையாண்மையை வலுப்படுத்துகிறது? ஒன்றிய அரசிடம் கல்வித் துறை இருக்க வேண்டுமா? அங்குள்ள இராணுவ வீரர்களின் போர்த் திறனை அது எந்த வகையில் மேம்படுத்துகிறது?' என்று கூறியிருந்தார்.அதேபோன்று, தலைவர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி, மாநிலங்களுக்கு சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற கொள்கையைத் தொடர்ந்து ஆதரித்தார். 1969-ஆம் ஆண்டு அவர் முதலமைச்சராக இருந்தபோது, ஒன்றிய-மாநில உறவுகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை அளித்திட நீதிபதி பி.வி. ராஜமன்னார் தலைமையில் முதல் குழுவை அமைத்தார்.

1971-ஆம் ஆண்டு இந்தக் குழு அளித்த அறிக்கை, இந்தியாவில் கூட்டாட்சி குறித்த விவாதங்களை வடிவமைப்பதில் ஒரு மைல்கல்லாக அமைந்தது. 1974-ஆம் ஆண்டு, தமிழ்நாடு சட்டமன்றம், ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு, உண்மையான கூட்டாட்சி அமைப்புக்கு வழிவகுக்கும் வகையில் அரசமைப்பைத் திருத்துமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தி ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை நிறைவேற்றியது.




## எல்லோரும் கிளம்ப வேண்டியதுதான்..

அமெரிக்காவில் வேலை பெற அதிகம் பயன்படுத்தப்படும் 'ஹெச்1பி' நுழைவு விசா திட்டம் மூலம் இந்தியர்களே பெரிதும் பலனடைந்து வருகின்றனர். 2020-இல் டிரம்ப் அதிபராக இருந்த காலத்தில், அமெரிக்க குடிமக்களுக்கு முன்னுரிமை வழங்கும் நோக்கில் இந்த விசா நடைமுறைகள் கடுமையாக்கப்பட்டன.அப்போது, அமெரிக்கர்களுக்கான வேலைவாய்ப்பைப் பாதுகாக்கும் வகையில், ஹெச்1பி விசா வழங்குவதை 2021 மார்ச் 31 வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. பின்னர், ஜோ பைடன் ஆட்சிக்கு வந்ததும் இந்தக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன.

டிரம்ப் விசா

ஆனால் இப்போது, டிரம்ப் மீண்டும் அதிபராக பொறுப்பேற்றுள்ள நிலையில், ஹெச்1பி விசா நடைமுறையில் மீண்டும் கடுமையான கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தத் தயாராக இருப்பதாக அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புத் துறை அறிவித்துள்ளது. புதிய திட்டத்தின்படி, அமெரிக்காவில் உயர் கல்விக்காக வரும் வெளிநாட்டு மாணவர்கள் நீண்ட நாட்களாக காலவரையின்றி தங்கும் நிலைமைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஹெச்1பி விதிகள்

இதனால், இனி மாணவர்களுக்கு அதிகபட்சம் 4 ஆண்டுகள் மட்டுமே தங்கும் அனுமதி வழங்கப்படும். அமெரிக்க குடிமக்கள் செலுத்தும் வரி வீணாகாமல் இருப்பதே இதற்கான காரணமாகக் கூறப்படுகிறது. மேலும், ஊடகவியலாளர்கள், நிபுணர்கள் போன்றோருக்கு முன்பு வழங்கப்பட்டிருந்த 5 ஆண்டு விசா மற்றும் அதனை எண்ணற்ற முறை நீட்டிக்கும் சலுகைகளிலும் மாற்றங்கள் கொண்டு வரப்படுகின்றன. இனி, முதல்கட்டமாக 240 நாட்கள் மட்டுமே தங்க அனுமதி வழங்கப்படும்.

கிரீன் கார்டு

பின்னர் அதனை 240 நாட்கள் வரை நீட்டிக்கலாம். ஆனால், அந்த நீட்டிப்பு அந்த பணிக்கு வரும் ஊழியர்களின் பணிக்காலத்தை விட அதிகமாக இருக்கக் கூடாது என்ற நிபந்தனை விதிக்கப்படுகிறது.

## வைகை ஆற்றில் மிதந்த ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம் மனுக்கள்



கடிதம் வென்றவர், | மதுரை:

இதைத்தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் 10,000 இடங்களில் முகாம்கள் நடைபெற்று ஊரகப் பகுதிகளைப் பொறுத்தவரை 15 துறைகளின் வாயிலாக 45 சேவைகளும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை 13 துறைகளின் வாயிலாக 43 சேவைகளும், வழங்கப்பட்டு வருகிறது.

'உங்களுடன் ஸ்டாலின்' முகாமில் மகளிர் உரிமைத் தொகை, பிறப்பு, இறப்பு சான்றிதழ், ஆவணங்களில் பெயர் திருத்தம், பட்டா, சிட்டா உள்ளிட்டவற்றுக்கான மனுக்களை மக்கள் அளித்து வருகின்றனர். இந்த முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு உரிய பயனாளிகள் பட்டியல் விரைவில் வெளியிடப்படும். எனவே பொதுமக்கள் முகாம்களில் மட்டுமே விண்ணப்பங்களை பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்களில் மக்கள் வழங்கும் மனுக்கள் மீது அதிகபட்சம் 45 நாட்களில் தீர்வு காணப்படும் என அரசு அறிவித்திருக்கும் நிலையில், இதுவரை நடந்த முகாம்கள் மூலம், லட்சக்கணக்கான மனுக்கள் பெறப்பட்டிருப்பதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

# விஜய், கூட்டணி பற்றி என்னிடம் கேட்காதீர்கள்

## டென்ஷனான பிரேமலதா விஜயகாந்த்





கடிதம் வென்றவர்,திருநெல்வேலி: பீகாரில் மட்டுமல்ல இந்தியா முழுவதும் வாக்குத் திருட்டு நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கிறது. தேர்தல் ஆணையம் இப்போதல்ல எப்போதுமே பொம்மையாகத்தான் இருக்கிறது. மக்கள் பிரச்சனையை பற்றி கேளுங்கள் என்னிடம் விஜய் குறித்தும், கூட்டணி குறித்தும் கேட்காதீர்கள் என்று செய்தியாளர்களிடம் பிரேமலதா விஜயகாந்த் கோபமாகக் கூறிவிட்டுச் சென்றது பரபரப்பை ஏற்படுத்தியது.தூத்துக்குடியில் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் இன்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ராகுல் காந்தியின் போராட்டங்கள் குறித்த கேள்விக்கு பதில் அளித்த அவர், "தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் வாக்குத் திருட்டு நடக்கிறது. அரசியலில் மட்டுமல்ல, தேர்தலிலும் அதிகார துஷ்பிரயோகம் நடக்கிறது.

### தேர்தல் ஆணையம் முன்வர வேண்டும்

தேர்தல் ஆணையமும், நீதிபதிகளும் ஜனநாயக நாட்டில் நேர்மையான, முறையான தேர்தலை நடத்துவதற்கு முன்வர வேண்டும். அப்போதுதான், நாங்கள் தேர்தலில் நிற்பதற்கே ஒரு அர்த்தம் இருக்கும். கண்கூடாகவே ஓட்டுக்கு காசு கொடுப்பது, தப்பு நடக்கிறது என்று அனைத்தும் தெரிகிறது. இதைப் பார்த்துக் கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனால், பீகார் மட்டுமல்ல இந்தியா முழுவதும் தேர்தல் முறையில் சீர்திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்றார்.

### பொம்மை தேர்தல் ஆணையம்

தேர்தல் ஆணையம் பா.ஜ.க.வின் பொம்மையாக செயல்படுவதாக குற்றச்சாட்டு உள்ளது குறித்த கேள்விக்கு, அதெல்லாம் சும்மா. தேர்தல் ஆணையம் இப்போதுதான் பொம்மையாக இருக்கிறதா?. அது எப்போதுமே அப்படித்தான் இருக்கிறது. இது ஒன்றும் இன்றோ நேற்றோ கிடையாது. இந்தியா முழுவதும் இந்தப் பிரச்சனை உள்ளது. அனைத்து மாநிலங்களிலும் இதுதான் பிரச்சனை.

### ஓட்டுக்கு காசு

முதலில் வாக்குக்கு காசு கொடுக்கும் கலாச்சாரத்தை ஒழிக்க வேண்டும். கள்ள ஓட்டு, வாக்குத் திருட்டு அராஜகங்களை, தடுத்து நிறுத்த வேண்டும். இதற்கு தேர்தல் ஆணையம் தான் ஒரு உறுதியான முடிவை எடுக்க வேண்டும்.

### தேமுதிகவுக்கு வரவேற்பு

2026 சட்டப்பேரவைத் தேர்தல் குறித்த கேள்விக்கு, மக்கள் மத்தியில் எங்களுக்கு மிகப்பெரிய வரவேற்பு இருக்கிறது. வெகு விரைவில் இந்த பகுதியிலும் எங்கள் பயணத்தை தொடங்குவோம். கூட்டணி குறித்த கேள்விக்கு, கூட்டணி பற்றி எல்லாம் நீங்களாக கற்பனை செய்துகொண்டால் நான் பதில் சொல்ல முடியாது. நாங்கள் எங்கள் வேலையைச் செய்து கொண்டிருக்கிறோம்.

### தேர்தலில் பிரேமலதா

சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிடுவீர்களா என்ற கேள்விக்கு, தேர்தலுக்கு இன்னும் 9 மாதங்கள் இருக்கின்றன. இன்னும் நிறைய காலம் இருக்கிறது. உரிய நேரத்தில் அதுபற்றி நாங்களே அறிவிப்போம்.

### கோபமான பிரேமலதா

தவெக மாநாடு தொடர்பான பிரச்சனைகள் குறித்த கேள்விக்கு, இந்த கேள்வியைத் தவிர வேறு கேள்வியே இல்லையா. தமிழகம் முழுவதும் தினமும் செய்தியாளர்களைச் சந்திக்கிறேன். இந்த ஒரு கேள்வியைத் தவிர வேறு கேள்வியை கேட்பதில்லை. நான் உங்களிடம் ஒன்று கேட்கிறேன். நான் தூத்துக்குடிக்கு வந்திருக்கிறேன். இங்குள்ள மக்களின் பிரச்சனைகளை ஏன் கேட்க மாட்டேன் என்கிறீர்கள்?.

# ராகுல் காந்திக்கு சர்ருன்னு எகிறுது ஆதரவு..



டெல்லி: மோடி அரசை எதிர்த்து, எதிர்க்கட்சிகளின் கூட்டணியை வழிநடத்த காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தான் மிகவும் பொருத்தமானவர் என்று இந்தியா டுடே- சி-வோட்டர் கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.'Mood of the Nation' என்ற பெயரில் கடந்த பிப்ரவரி மாதம் India Today - சி வோட்டர் இணைந்து கருத்து கணிப்பை நடத்தியது. இதனைத் தொடர்ந்து இந்த ஆகஸ்ட் மாதம் மீண்டும் கருத்துக்கணிப்பு நடத்தி, அதன் முடிவுகளை முந்தையதுடன் ஒப்பிட்டு வெளியிட்டுள்ளது.

இந்தியா டுடே- சிவோட்டர் நடத்திய மூட் ஆஃப் தி நேஷன் (MOTN) கருத்துக் கணிப்பு ஜூலை 1 முதல் ஆகஸ்ட் 14, 2025 வரை அனைத்து மக்களவைத் தொகுதிகளிலும் 54,788 நபர்களிடம் ஆய்வு செய்யப்பட்டது. சி வோட்டரின் வழக்கமான டேட்டாவில் இருந்து கூடுதலாக 1,52,038 நேர்காணல்களும் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இந்த MOTN கருத்துக்கணிப்பில் மொத்தம் 2,06,826 பேர் பங்கேற்றனர்.பாஜக - காங்கிரஸ்

2025பிப்ரவரி மாதம் நடத்தப்பட்ட கருத்து கணிப்பில் பாஜக தனித்து 281 இடங்களைப் பிடிக்கும் என்றும், எதிர்க்கட்சிகள் 184, காங்கிரஸ் 78 இடங்களைக் கைப்பற்றும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போதைய ஆகஸ்ட் மாத கருத்துக்கணிப்பில் பாஜகவுக்கு 260 இடங்களும் எதிர்க்கட்சிகளுக்கு 186 இடங்களும் காங்கிரஸுக்கு 97 இடங்களும் கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோடி செயல்பாடுகள்

பிரதமர் நரேந்திர மோடியின் செயல்பாடுகள் சிறப்பாக இருப்பதாக கடந்த பிப்ரவரி மாதம் நடத்தப்பட்ட கருத்து கணிப்பில் 62% பேர் தெரிவித்திருந்தனர். மோடியின் செயல்பாடுகள் மோசம் என 21% பேர் தெரிவித்திருந்தனர். தற்போதைய ஆகஸ்ட் மாத கருத்து கணிப்பில் மோடியின் செயல்பாடுகள் சிறப்பு என 58% பேர் மட்டுமே தெரிவித்துள்ளனர். மோடி அரசு செயல்பாடு மோசம் என 26% பேர் அதிருப்தியை வெளிப்படுத்தி உள்ளனர்.



## 2வது மனைவியுடன் திருமண நாளை கொண்டாடிய ராமதாஸ்! நர்சுடன் நடந்த திருமணம்! நடந்தது என்ன?

சென்னை: தமிழகம் முழுவதும் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது பாமக நிறுவனர் ராமதாஸ் இரண்டாவது மனைவியுடன் திருமண நாளை கொண்டாடிய விவகாரம். 66 வயதான செவிலியர் சுசிலாவுடன் ராமதாஸ் நட்சத்திர ஹோட்டலில் 50வது திருமண நாளை கொண்டாடியிருக்கிறார் என கூறப்படுகிறது. இந்த நிகழ்வில் ராமதாஸின் குடும்பத்தினர் யாரும் கலந்துகொள்ளவில்லை. இந்த நிலையில் பாமகவில் நடக்கும் பிரச்சினைகளுக்கு இந்த சுசிலா தான் காரணம் என பாமகவினர் அப்போதே சொல்லி வந்தது குறிப்பிடத்தக்கது. மேலும் தற்போது சுசிலாவுக்கு 66 வயதாகும் நிலையில், பல ஆண்டுகளுக்கு முன்பே செவிலியர் சுசீலாவை ராமதாஸ் 2வது திருமணம் செய்துகொண்டார் என்கின்றனர் 'பழைய' பாமகவினர்.

2026 தேர்தலுக்கு தமிழ்நாடு தயாராகி வரும் நிலையில் பிரதான அரசியல் கட்சிகள் பிரச்சார களத்தில் குதித்துள்ளன. ஆனால் உட்கட்சி மோதலால் பாமக சிக்கித் தவித்து வந்தது. தந்தை ராமதாஸ், மகன் அன்புமணி ராமதாஸ் இடையே மோதல் போக்கு நிலவி வந்த நிலையில் அடுத்தடுத்து பிரச்சனைகள் பாமகவில் முளைத்தன.அன்புமணி ராமதாஸ் நீக்கப்பட்டது, ராமதாஸ் போட்டிப் பொதுக்குழு நடத்தியது என பல பிரச்சனைகள் தொண்டர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தின. இந்த நிலையில் கடந்த மாதம் ராமதாஸ் தனது மனைவி சரஸ்வதியுடன் திருமண நாளைக் கொண்டாடினார்.

ராமதாஸ்

அந்தப் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வெளியானது. இந்த நிலையில் தற்போது ராமதாஸ் இரண்டாவது மனைவியுடன் திருமண நாளைக் கொண்டாடியதாக வெளியாகியிருக்கும் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி பேசுபொருளாக மாறி இருக்கின்றன. அவருடன் இருப்பவர் பெயர் சுசிலா. அவர் ஒரு செவிலியர் என்பது குறிப்பிடத்தக்கது. அடிப்படையில் மருத்துவரான ராமதாஸ் தன்னிடம் பணியாற்றிய செவிலியர் சுசிலாவை இரண்டாவது திருமணம் செய்து கொண்டதாகக் கூறப்படுகிறது.

அச்சிடப்பட்டது, வெளியிடப்பட்டது மற்றும் சொந்தமானது DR.B.ANILKUMAR ,@ 407 தர்ணாகா , ஹைதராபாத் , தெலுங்கானா மாநிலம். DAIWIK PUBLICATIONS pvt.ltd இல் வெளியிடப்பட்டது.
SNEHITHA PRINTERS H.NO: 2-6 , வாரங்கல் மாவட்டம்.தெலுங்கானா மாநிலம் , ஆசிரியர் DR.B.ANILKUMAR ,RNI NO TELTEL/2021/ 81079 , செல்: 7702866885 ,vijethatelugudaily@gmail.com